திரு. செ. து. வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கால் முறிவுகளோ அல்லது எலும்பு முறிவுகளோ ஏற்பட்டால் மாவு கட்டு மிகப் பயங்கரமாக அரசு மருத்துவமனைகளிலே போடுவதால் நோயாளிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, புத்தூரிலே பச்சை இலை கட்டு போடுகின்ற தன்மைகளைப் பார்க்கின்றபொழுது நிறைய நோயாளிகள், இந்த மாவுக் கட்டைவிட அங்கே போய் சிகிச்சை பெறுவது நலம் என்று கருதி அங்கே செல்கிறார்கள். ஆகவே, அரசு மருத்துவ மனைகளிலேயும் அந்த மாவுக்கட்டுகளை மிகக் கனமாகப் போடுவதைத் தவிர்க்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாவு கட்டு கனமாக போடுவதற்குக் காரணமே, இரண்டு மாத காலமோ அல்லது ஒருமாத காலமோ முறிந்த எலும்பு அந்த இடத்தை விட்டு நகராமல் இருந்தால்தான், ஒழுங்காக அந்த முறிந்த இடம் கூடும் என்பதற்காகத்தான் அந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. எனவே அது பயங்கரமான கட்டு அல்ல. ஒரு வார காலத்திற்கோ அல்லது 15 நாட்களுக்கோ எவ்வளவு நாள் மருத்துவர்கள் சொல்கிறார்களோ அவ்வளவு நாள் மட்டும்தான் அந்த கட்டு போடுவதால் சிரமம் இருக்கும் புத்தூரிலே போடுகிற கட்டிலே வாழ்க்கை பூராவும் சிரமம் ஏற்பட்டாலும் ஏற்பட்டுவிடும் என்ற காரணத்தால்தான் அதை இங்கே நாம் கடைப்பிடிப்பதில்லை. எனவே, அப்படிப்பட்ட ஒரு எண்ணம் அரசாங்கத்திற்கு இல்லை. ஏற்கெனவே, இவையெல்லாம் பெரிய ஆராய்ச்சிக்கு இடையிலே பெரிய பெரிய மருத்துவர்கள் கண்டுபிடித்து செய்கிற காரியம். எனவே, அதிலே நாம் தலையிடக் கூடாது. மருத்துவர்கள் என்ன சொல்கிறார்களோ அதைக் கேட்பது நமக்கு நல்லது என்று கருதுகிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 387, திரு. எஸ். சண்முகநாதன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

387—

ஆலங்குடி மருத்துவமனைக்கு பெண் மருத்துவர், பல் மருத்துவர் ஆகியோர்களை நியமித்தல்.

*12544—திரு. எஸ். சண்முகநாதன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

1993 ஏப்ரல் 19]

ஆலங்குடி அரசு மருத்துவமனைக்குப் பெண் மருத்துவர், பல் மருத்துவர்களை நியமிக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

ஏற்கெனவே கொடுத்த விடையிலே ''இல்லை'' என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது சமீபத்திலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொடுத்த ஆணையின்படி நேரடியாக எந்தெந்த மருத்துவ மனைகளிலே பெண் மருத்துவர்கள் இல்லையோ அல்லது குறிப்பிட்ட ஸ்பெஷலிஸ்ட் இல்லையோ அங்கே நேரடி நியமனத்திற்கு ஒரு ஏற்பாட்டைச் செய்து கொடுத்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே இந்த மருத்துவமனையிலே நியமிப்பதற்கு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளலாம்,

திரு. எஸ். சண்முகநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆலங்குடியிலே இருக்கிற அரசு மருத்துவமனையிலே கடந்த இரண்டு ஆண்டுக் காலமாகப் பெண் மருத்துவர்கள் இல்லாத காரணத்தினாலே அப்பகுதியிலே வாழ்கின்ற ஏழை எளிய மக்கள் பெரிய கஷ்டத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். ஏழை எளிய மக்கள் நம்முடைய அரசாங்கத்தினுடைய குடும்ப நல திட்டங்களைப் பற்றி ஆலோசனைகளைப் பெறுவதற்கும் பெண்களுக்கு ஏற்படுகின்ற அந்த இரகசிய நோய்களைப் பரிசோதனை செய்வதற்கும் முடியாத சூழ்நிலையிலே—அங்கே ஆண் மருத்துவர்கள் இருக்கின்ற காரணத்தினாலே அங்கே—அச்சப்படுகின்ற சூழ்நிலையிலே இருக்கிறார்கள். அவர்களுடைய அச்சத்தைப் போக்குகின்ற வகையிலே உடனடியாக அங்கே பெண் மருத்துவர்களை நியமிக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அதைத்தான் ஏற்கெனவே நான் சொன்னேன். கொஞ்ச காலமாக பெண் மருத்துவர்கள் தேவையான அளவிற்கு நியமிக்கப்படாத காரணத்தினால் இந்த இடையூறு ஏற்பட்டிருக்கிறது. இப்பொழுது நமக்குத் தேவையான அளவிற்கு ஆரம்ப சுகாதார நிலையத்திலே கூட பெண் மருத்துவர்கள் இல்லாத சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. இதைப் போக்குகின்ற வகையிலேதான் இப்பொழுது வேறொரு நடவடிக்கையை எடுத்திருக்கிறோம். எங்கே பெண் மருத்துவர்கள் தேவையோ அங்கே ஏற்கெனவே இருப்பவர்களைக கொண்டு வந்து சேர்க்க முடியவில்லை என்றாலும், போதிய அளவிற்கு இல்லை என்ற நிலை ஏற்படுமேயானால், நேரடி நியமனத்தின்

மூலமாக அந்தப் பிரச்சினையைத் தீர்க்கலாம் என்று சொல்லப் பட்டிருக்கிறது. எனவே, அந்த உத்தரவின் அடிப்படையிலே இந்த மருத்துவ மனையிலேயும் அதற்கான நடவடிக்கை எடுப்பதற்காக ஏற்பாடு செய்யப்படும்.

திரு. எஸ். சண்முகநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இதுபோன்று அரசு மருத்துவமனையிலே அரசாங்கமே அந்தப் பெண் மருத்துவரை நியமிக்கின்ற பொழுது அவர்கள் வசதிக் குறைவின் காரணமாக, அவர்கள் தங்களுடைய இன்ஃப்ளுயன்ஸைப் பயன்படுத்தி, அங்கே வேலைக்கு வராத ஒரு சூழ்நிலையிலே இருந்து கொண்டிருக்கிறார்கள். அப்படிப் பட்ட அந்த மருத்துவர்களின் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எந்த இடத்திலே மருத்துவர்களை நியமிக்கிறோமோ அல்லது மாறுதல் கொடுக்கிறோமோ அந்த இடத்திலே அவர்கள் பணியாற்ற வேண்டும். கண்டிப்பாக அவர்கள் பணியாற்றாமல் விடுமுறையிலோ அல்லது வராமல் ஆப்செண்டோ ஆகியிருந்தார்கள் என்றால் நிச்சயமாகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். நடவடிக்கை இப்பொழுது எடுத்துக்கொண்டிருக்கிறோம். இப்பொழுது நான் சொல்லிய முறை குறிப்பிட்ட ஏதாவது ஒரு மருத்துவமனைக்கு மருத்துவர்களே வராத சூழ்நிலை இருக்குமேயானால், அந்த இடத்திற்கு என்று நேரடி நியமனம் செய்வதன் மூலமாக ஒரு ஐந்தாண்டுக் காலத் திற்கு தொடர்ந்து அந்த இடத்திலே அவர்கள் கண்டிப்பாக பணியாற்ற வேண்டுமென்ற அடிப்படையிலே இந்த உத்தர வாதத்தோடுதான் நாம் நியமிக்கிறோம். எனவே, இந்தப் பிரச்சினை அதன் மூலமாக தீர்க்கப்படுமென்று நான் கருது கிறேன். இருந்தாலும் அரசு மருத்துவர்கள் எங்கே நாம் பணியிலே அமர்த்துகிறோமோ அந்த இடத்திலே இருந்து அவர்கள் பணியாற்ற வேண்டிய கடமை இருக்கிறது. அவர்கள் கண்டிப்பாக பணியாற்ற வேண்டும். இல்லையென்றால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. சோ. பாலகிருஷ்ணன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது ஆலங்குடி சம்மந்தப்பட்ட கேள்வி யாக இருந்தாலும் கூட, தமிழகம் முழுவதும், குறிப்பாக என்னுடைய முதுகளத்தூர் தொகுதியில் முதுகளத்தூர் தாலுக்கா மருத்துவமனையில் ஆறு டாக்டர்கள் இருக்கிறார்கள். ஒரு பெண் மருத்துவர்கூட கிடையாது. இப்படிப்பட்ட இடங் களில். . . . .

1993 ஏப்ரல் 19]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. பால கிருஷ்ணன், இப்படிப்பட்ட கேள்விகளுக்கெல்லாம் அமைச்ச ரிடத்திலே பதில் இருக்காது. (குறுக்கீடு) அமைச்சரவர்கள் விடை அளிப்பதாகச் சொல்வதால் நீங்கள் கேள்வியைத் தொடர லாம்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : நம்முடைய அமைச்சரவர் களிடத்தில் நான் நேரடியாகச் சொல்லிய நேரத்தில் உடனே ஒரு டாக்டரைக் கூட நியமித்தார்கள். ஆனால் நியமித்த பத்து நாட்களுக்குள்ளாக அவர் மாறுதல் வாங்கிக் கொண்டு சென்று விட்டார். ஆகவே, நான் இங்கே அமைச்சரவர் களுக்கு நன்றி சொல்லிவிட்டு ஊருக்குச் சென்ற உடன் அங்கே டாக்டர் டிரான்ஸ்பர் ஆகிப் போய்விட்டார் என்று சொன் னார்கள். ஆகவே, நம்முடைய அமைச்சரவர்கள் இங்கே சொன் னதைப்போல ஐந்தாண்டுகளுக்காவது நிரந்தரமாக இந்தக் கிராமப் பகுதிகளில் பெண் மருத்துவர்கள் வேலை செய்கின்ற அளவிற்கு ஒரு நல்ல உத்தரவை உடனே போடுவார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் ஏற்கெனவே இதைப் பற்றி ஒரு முறை விளக்கமாகச் சொல்லி இருக்கிறேன். மருத்துவர் களைப் பொறுத்த வரையில் நியமிக்கின்ற பொழுது பெண் மருத்து வர்கள் எவ்வளவு தேவை என்னென்ன ஸ்பெஷலிஸ்டுகள் தேவை என்ற அடிப்படையிலே இதுவரை இந்தத் துறை துவக்கிய காலத்திலேயிருந்து இதுவரை அப்படிப்பட்ட உணர் வோடு, அப்படிப்பட்ட அடிப்படையிலே இந்த டாக்டர்களை நாம் நியமிக்கவில்லை. எம்.பி.பி.எஸ். படித்திருந்தால் போதும்; யாராக இருந்தாலும் பரவாயில்லை என்று நாம் எடுத்து விட்டோம். பெண் டாக்டர்கள் 30 சதவிகிதம் எடுக்க வேண்டுமென்ற உத்தரவை ஏற்கெனவே இட்டிருக்கிறார்கள். ஆனால் அது போதாமல் இருக்கிறது. எனவேதான் பல இடங்களிலே பெண் டாக்டர்கள் இல்லாத ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது.

முற்பகல் 10-30

இன்னும் சொல்லப் போனால், மருத்துவர்களாக வரக் கூடியவர்கள் மிகப்பெரிய இடத்திலே, குறிப்பாக சட்டமன்ற உறுப்பினர்களுக்கோ, மற்றவர்களுக்கோ எப்படியாவது சொந்த மாகவோ, எப்படியோ இருக்கிற காரணத்தினால் ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து வேறொரு இடத்திற்குப் போகவேண்டும் என்ற தொல்லைகள் தாங்க முடியாததாக இருக்கிறது என்பதை இந்த

நேரத்திலே நான் சொல்லியாக வேண்டும். எனவே இந்தப் பிரச்சனையைத் தீர்ப்பதற்காகத்தான் குறிப்பிட்ட ஒரு இடத்தைக் குறிப்பிட்டு, அதாவது ஒரு 'ரிமோட்' பிளேஸிலே பெண் டாக்டர்கள் இல்லை; அல்லது உரிய மருத்துவர்கள் இல்லை என்று சொன்னால் அந்த இடத்திற்கென்று நாங்கள் நேரடியாக அழைப்பதன் மூலமாக அங்கே யார் பணியாற்ற விருப்பம் தெரிவிக்கிறார்களோ அவர்களை மட்டுமே நாங்கள் அனுமதிக்கப் போகிறோம். எனவே, அப்படி அனுமதிக்கிறபோது, நிச்சயமாக ஒரு ஐந்தாண்டு காலத்திற்கு மருத்துவமனையைப் பொறுத்தவரை, பிரச்சினை இல்லாமல் இருக்குமென்று நான் கருதுகிறேன். இதிலே இருக்கிற ஒரு சிக்கல் என்னவென்று சொன்னால், அரசுத் துறையிலே பணியாற்றிக் கொண்டிருக்கிற எந்த அதிகாரியாக இருந்தாலும், வேறு இடத்திற்கு மாற்றுகிற போது அவர்கள் நிச்சயமாக விடுமுறையிலே போகாமல் 99 சதவிகிதம் அவர்கள் போய், அந்தப் பணியை ஏற்றுக்கொள் கிறார்கள். மருத்துவர்களைப் பொறுத்தவரையில் அந்தப் பிரச்சினை அவர்களுக்கு இல்லை. காரணம், அவர்களுக்கு வருகிற சம்பளத்தை தவிர, வேறு வருமானம் இருக்கிற காரணத்தினால், அவர்கள் போய் அங்கே சேரவேண்டிய அவசியம் இல்லாமல் இருக்கிறது. அவ்வளவு முக்கியத்துவம் இல்லாமல் இருக்கிற காரணத்தால், அவர்கள் இருக்கிற அத்தனை விடுமுறைகளையும் பயன்படுத்திக் கொள்கிறார் கள். இதனால் சிக்கல் ஏற்படுகிறது. அந்தப் பிரச்சினை யைத் தீர்ப்பதற்காகத் தான் இப்போது ஒரு நடவடிக்கையை நாங்கள் எடுத்திருக்கிறோம். ஆனால் இந்த நடவடிக்கை யின் மூலமாக ஒரு ஆண்டு காலத்திலே எல்லாப் பிரச்சினை களையும் தீர்த்து விட முடியாது. படிப்படியாகத் தான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாம் ஏற்கெனவே ஒரு விதி வைத்திருக்கிறோம். அதாவது, படித்தது முடித்து வெளியே வந்தவுடனே கிராமங்களிலே குறைந்தது இரண்டாண்டுக் காலமாகிலும் அவர்கள் வேலை செய்ய வேண்டியிருக் கிறது. அது இப்போது அமல் நடத்தப் படுகிறதா? அந்த கிராமங்களிலே வரக்கூடிய 'டாக்டர்கள்' எல்லாம் லீவ் போட்டு விட்டு சென்று விடுகிறார்களே அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்பு கிறேன்.

1993 ஏப்ரல் 19]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டாண்டுகள் என்று அல்ல அவர்கள் படிப்பிற்கேற்ப எம்.பி., பி.எஸ்.-ஆக இருந்தால் மூன்று ஆண்டுக் காலம் ; டிப்ளமோவாக இருந்தால் 2 ஆண்டுக் காலம்; போஸ்ட்-கிராஜுவேட்டாக இருந்தால் ஓராண்டுக் காலம் என கண்டிப்பாக ஆரம்ப சுகாதார நிலையங்களிலே பணியாற்ற வேண்டுமென்று விதி முறை கடுமையாக இது வரை நடைபெற்றுக் கொண்டு தான் வருகிறது. ஒரு வேளை யாராவது வந்து, விடுமுறையிலே போய் விட்டால், அவர்கள் அந்தக் குறிப்பிட்ட காலத்தை முடிக்காமல் மீண்டும் டி.எம்.எஸ். சைட்—அதாவது அரசு மருத்துவ மனைகளுக்கு வர முடியாது ; ஆரம்ப சுகாதார நிலையத்திலே பணியாற்றவேண்டுமென்ற ஒரு விதி முறையை நாம் வைத்திருக்கிறோம். அதன்படி அவர்கள் பணியாற்றி விடுகிறார்கள். அதிலே நமக்கு இப்போது சிக்கல் வரவில்லை. ஆனால், அதற்குப் பின்னாலே ஒரு குறிப்பிட்ட தாலுக்கா மருத்துவ மனைக்குப் போடுகிற போது அவர்கள் அங்கே போய்ச் சேராமல் தங்களுக்கு விருப்பமான இடத்திற்குப் போக வேண்டும் என்பதால் சில சிக்கல்கள் ஏற்படுகின்றன. அதையெல்லாம் தவிர்ப்பதற்குத்தான் நாம் இப்போது நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். யாரெல்லாம் விடுமுறையிலே போய்க் கொண்டிருக்கிறார்களோ, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அத்தனை ஏற்பாடுகளையும் நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 3881 திரு. கே. ஏ. மனோகரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

388—

தருமபுரி மாவட்டத்திலுள்ள தெலுங்கு படித்த இளைஞர்களுக்கு போக்குவரத்துக் கழகங்களில் வேலை வாய்ப்பு.

*11589— திரு. கே.ஏ. மனோகரன் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், ஒசூர் மற்றும் தென்கனிக் கோட்டை வட்டத்தில் தெலுங்கு படித்த இளைஞர்களுக்கு போக்குவரத்துக் கழகங்களில் வேலை வாய்ப்பு கொடுப்பதில்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க அரசு முன்வருமா ?